முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், மதுரை
முன்னிலை- திருமதி. என். நாகலட்சுமி, எம்.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, மதுரை
2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண். 168/2021**

**இளவர் காப்பாளர் அசல் மனு எண். 133/2021**

M.கண்ணன்
K.செல்வி ... மனுதாரர்கள்

/எதிர்/

கு.குமாராண்டி
சுந்தம்மாள் ... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது கடந்த 06.01.2023-ம் தேதி அன்று என் முன் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. S.பாலகிருஷ்ணன் அவர்கள் முன்னிலை யாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் Y.யோகேஸ்வரி அவர்கள் முன்னிலை யாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த

**உத்தரவு**

இம்மனுவானது மைனர் குழந்தைகளை மனுதாரர்கள் இருவரும் வாரம் ஒருமுறை எதிர்மனுதாரர்கள் வீட்டிலோ அல்லது இருவருக்கும் பொதுவான ஒரு இடத்திலோ ஒரு நாள் முழுவதும் இருந்து பார்ப்பதற்கும் நல்ல உணவுகள் மற்றும் உடைகள் கொடுப் பதற்கும் மனுதாரர்கள் தரப்பில் பிரிவு 17 உ/இ 151 C.P.C-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தின் சுருக்கம்:-

மனுதாரர்கள் மைனர்கள் ஹர்சன் மற்றும் தன்வின் இருவரின் தாய்வழி தாத்தா பாட்டி ஆவர். எதிர்மனுதாரர்கள் மைனர்கள் ஹர்சன் மற்றும் தன்வின் இருவரின் தந்தை வழி தாத்தா பாட்டி ஆவர். மைனர்களின் தந்தையான சிவராஜன் தீயணைப்பு மீட்புப் பணித்துறையில் பணி புரிந்து வந்தார். கடந்த 14.11.2020-ம் தேதியில் மதுரையில் ஒரு ஜவுளிக்கடையில் நடந்த தீ விபத்தில் சேவையின் போது சிவராஜன் இறந்து விட்டார். மைனர்களின் தாயார் அங்கயற்கன்னி கணவரின் இறப்பு துன்பம் தாளாமல் தீராத மனவேதனையில் இருந்து வந்த நிலையில் கடந்த 21.12.2020-ம் தேதியில் தற்கொலை செய்து கொண்டார் என்பது மிகவும் சோகமானது. மேற்படி குழந்தைகள் தாய் மற்றும்

தந்தையை இழந்து மிகுந்த மன வேதனையுடன் உள்ளார்கள். இரு மைனர் குழந்தை களையும் மனுதாரர்கள் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் அதை எதிர்மனுதாரர்கள் கேட்காமல் மைனர்களை எதிர்மனுதாரர்கள் வலுகட்டாயமாக வைத்துக் கொண்டனர். எதிர் மனுதாரர்களின் வயோதிகம் மற்றும் கல்வியறிவு இல்லாத காரணத்தால் குழந்தைகளை சரிவர பராமரிக்க இயலாது. இறந்து போன சிவராஜனுக்கு கிடைக்க வேண்டிய அரசுதுறை சார்ந்த பயன்கள் முழுவதும் எதிர்மனுதாரர்கள் பெயரிலும் அரசு வழங்கிய இழப்பீடு தொகை உள்ளது. மனுதாரர்கள் மைனர் குழந்தைகளை பார்ப்பதற்கு எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு செல்லும் போது அவமரியாதை செய்து குழந்தைகளை காட்டாமல் திருப்பி அனுப்பி விடுகின்றனர். எனவே மைனர் குழந்தைகளை மனுதாரர்கள் இருவரும் வாரம் ஒருமுறை எதிர்மனுதாரர்கள் வீட்டிலோ அல்லது இருவருக்கும் பொதுவான ஒரு இடத்திலோ ஒரு நாள் முழுவதும் இருந்து பார்ப்பதற்கும் நல்ல உணவுகள் மற்றும் உடைகள் கொடுப்பதற்கும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்:-</u>

எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவை யாவும் எதிர்மனுதாரரால் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் கூறியுள்ள உறவுமுறை ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதே போல் மைனர்களின் தந்தை தீ விபத்தில் இறந்து விட்டார் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மனுதாரர்களின் முதல் மகனுக்கு எவ்வித நிரந்தர வேலையும் இல்லாததால் இறந்து போன சிவராஜனின் இறப்பு கால பயன்களை அவரது எதிர்கால வாழ்விற்காக அதீத வட்டிக்கு கொடுக்கும் பைனான்ஸ் தொழில் செய்ய கொடுக்கும் படி அங்கயற்கண்ணியை வற்புறுத்தியதற்கிணங்க வேறுவழியின்றி கடந்த 21.12.2020-ம் தேதி அன்று அங்கயற்கண்ணி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்பதே உண்மையாகும். இளவர்கள் எதிர்மனுதாரர்களுடன் மகிழ்ச்சியுடனும் பராமரிப்புடன் வாழ்ந்து வருகின்றனர். மனுதாரர்களின் தீய செயல்களால் மனுதாரர்களை பார்த்தாலே அச்சப்படும் மனநிலையில் இளவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். மனுதாரர்கள் உண்மையை மறைத்து பொய்யாக தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. மனு, ஆணையுறுதி ஆவணம் மற்றும் எதிர்உரையின் அடிப்படையில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. பிரச்னைக்குரிய தீர்வு-

மனுதாரர்கள் இருவரும் வாரம் ஒருமுறை எதிர்மனுதாரர்கள் வீட்டிலோ அல்லது இருவருக்கும் பொதுவான ஒரு இடத்திலோ ஒரு நாள் முழுவதும் இருந்து பார்ப்பதற்கும் நல்ல உணவுகள் மற்றும் உடைகள் கொடுப்பதற்கும் அனுமதி வேண்டி மனுதாரர்கள் தரப்பில் செய்யப்பட்டுள்ள மனு.

6. மனுதாரர்கள் தரப்பில் அசல் மனுவானது மைனர் குழந்தைகளுக்கு காப்பாளராக மனுதாரர்களை நியமனம் செய்து மனுதாரர்கள் பொறுப்பில் மைனர்களை கொடுக்கும் படியும், மனுதாரர்களின் தாயார் பெயரிலுள்ள இரண்டு சேமிப்பு பத்திரங்களை மைனர் மனுதாரர்கள் 18 வயது பூர்த்தியாகும் வரை நிரந்தர வைப்பீட்டில் உள்ள சேமிப்பு பத்திரங்களுக்கு மனுதாரர்களையே காப்பாளராக நியமிக்க கோரி மனு தாக்கல் செய்யப் பட்டு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்கள் இளவர்களின் தாய் வழி தாத்தா, பாட்டி என்றும், இளவர்களின் தாய் தந்தையர் இறந்து விட்ட நிலையில், எதிர்மனுதாரர்கள் இளவர்களை அழைத்து சென்று விட்டனர் என்றும், மனுதாரர்கள் மைனர் குழந்தைகளை பார்ப்பதற்கு எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு செல்லும் போது அவமரியாதை செய்து குழந்தைகளை காட்டாமல் திருப்பி அனுப்பி விடுகின்றனர். எனவே மைனர் குழந்தைகளை மனுதாரர்கள் இருவரும் வாரம் ஒருமுறை எதிர்மனுதாரர்கள் வீட்டிலோ அல்லது இருவருக்கும் பொதுவான ஒரு இடத்திலே ஒரு நாள் முழுவதும் இருந்து பார்ப்பதற்கும் நல்ல உணவுகள் மற்றும் உடைகள் கொடுப்பதற்கும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளளதாக மனுதாரர்கள் தரப்பில் வாதுரை முன் வைக்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் இளவர்களின் தந்தை வழி தாத்தா பாட்டி என்றும், இளவர்கள் எதிர்மனுதாரர்களுடன் மகிழ்ச்சியுடனும் பராமரிப்புடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும், மனுதாரர்களின் தீய செயல்களால் மனுதாரர்களை பார்த்தாலே அச்சப்படும் மனநிலையில் இளவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றும், மனுதாரர்கள் உண்மையை மறைத்து பொய்யாக தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதுரை முன் வைக்கப்பட்டுள்ளது.

8. இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் மனுதாரர்கள் இளவர்களின் தாய் வழி தாத்தா பாட்டி என்பதும், எதிர்மனுதாரர்கள் இளவர்களின் தந்தை வழி தாத்தா பாட்டி என்பதும் தெரியவருகிறது. எதிர்மனுதாரர்கள் வசம் இருக்கும் இளவர் குழந்தைகளை

மனுதாரர்கள் வாரம் ஒருமுறை பார்ப்பதற்கு அனுமதி வழங்கி உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில்

In the Supreme Court of India

Civil Appeal No. 1847/2021

Dinesh Kumar Vs Isha Rani

Having considered all aspects of the matter, without commenting on the merits so as not to prejudice either party in the substantive custody petition under Section 25 of the Guardians and Wards Act, 1890 which is still pending for final decision, keeping mind the paramount interest of the minor child, we are not satisfied that the impugned order for interim custody calls for any interference at this stage.

என்ற தீர்ப்புரையை முன் வைத்த நிலையில், இருதரப்பினருக்கும் பாரபட்சம் இல்லாத வகையில் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டும், இரு தரப்பினரின் வழக்கின் சாராம்சத்தை கருத்தில் கொண்டும் இறுதி முடிவு எடுக்கலாம் என மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி, இளவர் குழந்தைகளை பார்ப்பதற்கு அனுமதி கோரி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

முடிவாக, இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, இளவர் குழந்தைகளை மனுதாரர்கள் மாதத்திற்கு இரண்டு முறை அதாவது 2 வது மற்றும் 4 வது ஞாயிறு கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தங்களுடைய பொறுப்பில் வைத்துக் கொள்ள உத்தரவிட்டும், இளவர் குழந்தைகளை மனுதாரர்கள் மாலை 6 மணிக்கு மேல் பாதுகாப்புடன் எதிர்மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் இவ்வுத்தரவு சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2023-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ம் நாளாகிய இன்று என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/-N.Nagalakshmi,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.

<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம் :-</u> - இல்லை

Sd/-N.Nagalakshmi,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
மதுரை.
**I.A.No**.168/2021
**G.w.O.P.No**.133/2021
வரைவு/ செவ்வை உத்தரவு
நாள்-12.01.2023